# கதர், கிராம மற்றும் குடிசைத் தொழில்கள்

**(இனம் - 9)**

01. தமிழ் நாடு கதர் மற்றும் குடிசைத் தொழில்கள் வாரியமானது 1959 ஆம் ஆண்டைய (1959 ஆம் ஆண்டைய சட்டம் எண்.18) தமிழ்நாடு கதர் மற்றும் ஊரகத் தொழில்கள் வாரியச் சட்டத்தின்படி 1–4–1960 இல் அமைக்கப்பட்டது. அதன் நோக்கமானது, கதர் மற்றும் ஊரகத் தொழில்களை முன்னேற்றமடையச் செய்வதும், கதர் கிராம மற்றும் குடிசைத் தொழில்கள் துறையை முறைப்படுத்தி, நிதியளித்து, திட்டங்களை மேம்படையச் செய்வதும் ஆகும். ஊரகப் பகுதிகளில், குறிப்பாக, குறைந்த வேலை வாய்ப்புடையவர்களுக்கு, அவர்கள் தங்களுடைய அன்றாட வருவாயைப் பெருக்கிக் கொள்ளும் வகையில் வேலை வாய்ப்பளிப்பதும் அதன் நோக்கமாகும். அது தனது வட்டார எல்லைக்குள் கிடைக்கக்கூடிய வள ஆதாரங்களைப் பயன்படுத்தி, விற்பனை வாய்ப்புடைய பொருள்களை தயாரிப்பதில் தன்னை ஒருமுகப்படுத்திக் கொண்டுள்ளது. மேம்பட்ட கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் அறிமுகப்படுத்தவும் முயலுகிறது. அது தன்னுடைய 36 ஆண்டு காலத் தொண்டினை நிறைவு செய்யும் வேளையில் பாராட்டத்தக்க முன்னேற்றத்தையும் அடைந்துள்ளது. 15.53 இலட்சம் ஊரகக் கைவினைஞர்களுக்குத் தொடர் வேலைவாய்ப்பையும் அளித்துள்ளது. 1995–96 ஆம் ஆண்டில் 375 கோடி ரூபாய் மதிப்புள்ள ஊரகத் தொழில் பொருள்களையும், 37.90 கோடி ரூபாய் மதிப்புள்ள கதர் பொருள்களையும் தயாரித்துள்ளது. 1995–96 ஆம் ஆண்டில் மாநில அரசானது, இத்துறைக்கு 12.66 கோடி ரூபாயை வழங்கியுள்ளது. தமிழ்நாடு, கதர் உற்பத்தியில் இரண்டாம் இடத்திலும், தேசிய அளவில் ஊரகத் தொழில் பொருள்கள் உற்பத்தியில் மூன்றாம் இடத்திலும் உள்ளது.

02. வாரியத்தின் செய் கடமைகளானது, மேற்படி சட்டத்தின் 11ஆவது பிரிவில் பின்வருமாறு வரையறுக்கப்பட்டுள்ளது. (அ) கதர் மற்றும் ஊரகத் தொழில்களைத் தொடங்கி, ஊக்குவித்து, உதவி புரிந்து நடத்துதல். (ஆ) தகுதியுடைய நபர்களுக்கு அவர்களுடைய வீடுகளிலேயே ஆதாயம் பெறத்தக்க வேலை வாய்ப்பினை கதர் மற்றும் ஊரகத் தொழில்கள் அமைப்பின் வாயிலாக அளித்தல். (இ) கதர் மற்றும் ஊரகத் தொழில் வளர்ச்சிக்குரிய கடன்களையும் பிற உதவிகளையும் அளித்தல். (ஈ) கதர் மற்றும் ஊரகத் தொழில்களுக்கெனக் கூட்டுறவுச் சங்கங்களை அமைத்தல். (உ) பயிற்சி மையங்களை அமைத்து, அம்மையங்களிலுள்ள அல்லது மாநிலத்திற்கு வெளியேயுள்ள கதர் மற்றும் ஊரகத் தொழில் மையங்களிலுள்ளவர்களுக்குப் பயிற்சியளித்தல். (ஊ) பயிற்சி மையங்களுக்கு, மூலப் பொருள்கள், கருவிகள் மற்றும் துணைக் கருவிகளை வழங்கவும், அம்மையங்கள் தயாரித்துள்ள பொருள்களை விற்பனை செய்யவும் ஏற்பாடு செய்தல். (எ) மேற்படி தொழில் மையங்களால் தயாரிக்கப்படும் பொருள்களை விளம்பரப்படுத்தவும், அவற்றை மக்கள் விரும்புப்படிச் செய்யயும். பண்டகங்கள், வாணிக மையங்கள், பொருட்காட்சியகங்கள் முதலியவற்றை அமைப்பதன் வாயிலாக ஏற்பாடு செய்தல். (ஏ) இத்தொழில்களுக்கு முன்னுரிமை அளிப்பது குறித்தும், அத்தயாரிப்பாளர்களைப் பயன்படுத்திக் கொள்வது குறித்தும் பொதுமக்களிடையே பொதுக் கருத்தினை உருவாக்குதல். (ஐ) வல்லுநர்களிடமிருந்து அறிவுரையையும் வழிகாட்டுதலையும் பெறுதல். (ஒ) தொழில்நுட்ப ஆராய்ச்சி அல்லது கதர் உற்பத்தி அல்லது ஊரகத் தொழில் வளர்ச்சியை ஊக்குவிக்கவும், மேன்மையடையவும் செய்தல். (ஓ) கதர் மற்றும் ஊரகத் தொழில்கள் தொடர்பில் ஏற்படும் சிக்கல்கள் பற்றி ஆராய வசதி செய்தல்.

03. கதர் மற்றும் ஊரகத் தொழில் ஆணையத்தால் (க.ஊ.தொ.ஆ) வகுத்தமைக்கப்பட்டுள்ள 96 ஊரகத் தொழில்களில் 59 ஊரகத் தொழில்களைக் கதர் மற்றும் பிற கதர்த் தொழில்கள் ஊரகத் தொழில்கள் வாரியம் பின்வரும் மூன்று பகுதிகளாகச் செயற்படுத்தி வருகிறது.

| | | எண். |
|---|---|---|
| 1. | வாரியத்தின் சொந்த அலகுகள் | 1388 |
| 2. | வாரியத்தால் பதிவு செய்யப்பட்டுள்ள தொழில் கூட்டுறவு நிலையங்கள் (பனை பொருள்கள் உட்பட) | 1748 |
| 3. | கதர் மற்றும் ஊரகத் தொழில் ஆணையத்தின் உதவித் திட்டத்தின்படி நிதியுதவி பெற்றுள்ள கைவினைஞர்கள் | 88116 |

இவையன்றி, ஒருங்கிணைக்கப்பட்ட பழங்குடிகள் மேம்பாட்டுத் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சித் திட்டம், தாட்கோ போன்ற அரசுத் திட்டங்களும் கூட ஊரகப் பகுதி மக்களுக்கு வேலை வாய்ப்புகளை அளிப்பதற்கு வாரியத்தால் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

04. எண்ணெய், தானியம் மற்றும் பருப்பு வகைகள், நாரியற் பொருள், எலுமிச்சை, கரும்பு, மூங்கில் முதலிய திட்டங்களைக் கூட்டுறவு நிலையங்கள் மற்றும் தனியார் வாயிலாகச் செயற்படுத்தும் இவ்வாரியமானது கதர் திட்டங்கள் மற்றும் உண்ணத்தகா எண்ணெய் மற்றும் சோப்பு தயாரிப்புத் தொழில்களைத் தன்னுடைய அலகுகள் வாயிலாகச் செயற்படுத்துகின்றது. பிற ஊரகத் தொழில் திட்டங்களைப் பொறுத்த வரையில், வாரியத்தால், அதனுடைய சொந்த அலகுகள், தொழில் கூட்டுறவு நிலையங்கள் மற்றும் தனியார்களில் வாயிலாகச் செயற்படுத்தபடுகின்றன.

05. இவ்வாரியத்தின் கீழ் 751 ஊரக நெசவு நிலையங்களும் 87 கதர் உற்பத்தி நிலையங்களும் உள்ளன. இப்பிரிவுகள், 38500 பெண் உறுப்பினர்கள் உள்ளிட்ட ஏறத்தாழ 48,000 கைவினைஞர்களைப் பணிக்கமர்த்திக் கொண்டுள்ளன. இவ்வாரியம், 27 கதர் பட்டு உற்பத்தி நிலையங்கள் உடையது. அவற்றின் உற்பத்தியானது, 1995–96 இல் 20.30 கோடி ரூபாய் ஆகும். பாலியஸ்டர் கதர் உற்பத்தியானது, 1995–96 ஆம் ஆண்டில் ரூ.6.14 கோடி ஆகும்.

06. இவ்வாரியத்தின் கீழ் துறை சார்ந்த 241 ஊரகத் தொழில் பிரிவுகளும், 1748 தொழில் கூட்டுறவு நிலையங்களும் இயங்குகின்றன. சொந்தமாகப் பிரிவுகளைத் தொடங்கி இத்தொழிலில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ள தனிப்பட்ட கைவினைஞர்களுக்கும் வாரியம் நிதியுதவி அளிக்கிறது. இவ்வகையில், இவ்வாரியமானது இதுவரை, 88116 பேர்களுக்கு நிதியுதவி அளித்துள்ளது. தோல், சோப்பு, மின்னணுவியல் மண்பண்டங்கள், கையினால் தயாரித்த தாள்கள் போன்றவை இத்தொழில்கங்களால் உற்பத்தி செய்யப்படுகின்றன. ஊரகத் தொழில் பொருள்களின் உற்பத்தியும், விற்பனையும் 1994–95 மற்றும் 1995–96 ஆகிய ஆண்டுகளில் முறையே ரூ.378.96 கோடிகளாகவும், ரூ.397.30 கோடிகளாகவும் இருந்தது.

07. பனைப் பொருள்கள் தொழிலைப் பெருமளவில் உயர்த்தும் நோக்குடன் 1994 ஆம் ஆண்டைய 15–ஆவது சட்டத்தின் படி தமிழ்நாடு பனைப் பொருள்கள் மேம்பாட்டு வாரியம் 6–1–1995 இல் அமைக்கப்பட்டது. பனை மூலப் பொருள்களைப் பயன்படுத்தக் கூடிய சுய வேலை வாய்ப்பினை அளிப்பதன் வாயிலாக, ஊரகக் கைவினைஞர்களின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதே இவ்வாரியத்தின் முதன்மை நோக்கமாகும். சுய வேலை வாய்ப்புத் திட்டங்களை உருவாக்குவதற்காகக் கூட்டுறவுச் சங்கங்களை அமைப்பதன் வாயிலாக, மாநில மற்றும் மாவட்டப் பனை இணைபங்களின் மூலம் பல்வேறு பனைத் திட்டங்களின் கீழ்ப்பனை கைவினைஞர்களுக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.

08. மாநிலப் பனை இணையமானது, இம்மாநிலத்திலுள்ள தன்னுடைய 22 கிளைகளிலும், 7 மாவட்ட இணையங்களிலும் பல்வேறு பனைப் பொருள்களின் உற்பத்தியை மேற்கொண்டுள்ளது. மாநில மற்றும் இணையங்களின் விற்பனை நிலையங்களின் வாயிலாக இப்பனை பொருட்கள் விற்கப் பெறுகின்றன. உண்ணத்தக்க பல்வேறு பனைப் பொருள்களை, அதாவது, பதநீர், பனைவெல்லாம், பனஞ்சீனி, பனங்கற்கண்டு மற்றும் காற்றூட்டப்பட்ட பானங்கள், சாக்லேட் வகைகள், கரும்புப் பொருள்கள் மற்றும் உண்ணத்தக்க பிறவகைப் பொருட்கள் தயாரிக்கப்படுகின்றன. இவை தவிர, பல்வேறு உண்ணத்தகா பனை பொருள்கள், அதாவது பனை ஓலைப் பொருள்கள், பனைப் பொருள்கள், பனைநார் பொருள் மற்றும் பனைநார் பொருளுடன் கூடிய பனைத்துடைப்பம் முதலியனவும் தயாரிக்கப்படுகின்றன. பல்வேறு வகைகளில் பனைக் கூடைகள் மற்றும் கைத்தயாரிப்பு பனை பொருள்களும் தயாரிக்கப்படுகின்றன.

09. 1994–95 ஆம் ஆண்டில், 121.10 கோடி ரூபாய் மதிப்பளவில் பனை பொருள்களைத் தயாரிக்கும் முயற்சியில், 8.79 இலட்சம் பேர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாகியது. அதே ஆண்டில் 137.50 கோடி ரூபாய் அளவுக்கு விற்பனை செய்யப்பட்டது. அதில் ஏற்றுமதியான 71.52 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள பொருள்களும் அடங்கும். (அ) பனங்கற்கண்டு படிக வளர்ச்சி (ஆ) நுங்கு பதனம் (இ) பனை நார் பொருள் மற்றும் பனை நார்க்கூடை தயாரிப்பு (ஈ) பனை மரம் ஏறும்

கச்சை மற்றும் கருவிகள் பகிர்வு முதலியன போன்ற திட்டங்களுக்குரிய நிதி ஆதரவை மாநில அரசு அளிக்கிறது. இத்துறையானது குறைந்த அளவு முதலீட்டுடன் கூடிய ஊரக வேலை வாய்ப்பினை உருவாக்குவதற்கான மிகச் சிறந்த ஆற்றலுடையதுடன் ஏற்றுமதிக்கும் தாயகத்திற்குமான பொருள்களையும் தயாரிக்கிறது.

10. மாவட்டத்திலுள்ள அனைத்து திட்டங்களையும் கவனிப்பதற்காக, கதர் மற்றும் ஊரகத் தொழில் வாரியத்தின் சார்பில், கதர் உதவி இயக்குநர் ஒருவர் உள்ளார். அவருக்கு உதவியாக, ஒவ்வொரு மாவட்டத்திலும் பின்வரும் அலுவலர்கள் உள்ளனர்.

(i) கதர் ஆய்வாளர் – இவர், ஒவ்வொரு மாவட்டத்திலும், கதர் நூல், கதர் கைவினைப் பொருள் முதலியவற்றைத் தயாரிப்பையும், கதர் கைவினைப் பொருள்கள் விற்பனையையும் கவனித்துக் கொள்கிறார்.

(ii) மாவட்டக் குடிசைத் தொழில் ஆய்வாளர் – சோப்பு, கைத்தயாரிப்புத் தாள், காலணிப் அலகுகள் போன்ற துறைப் பிரிவுகளைக் கவனித்துக் கொள்கிறார்.

(iii) கதர் மற்றும் ஊரகத் தொழில் கூட்டுறவு அலுவலர் – எண்ணெய் உற்பத்தி, எலுமிச்சை, தச்சுவேலை, இரும்பு வேலை, தேனீ வளர்ப்பு முதலியன போன்ற கதர் தொடர்பிலான தொழில் கூட்டுறவு நிலையங்களைக் கவனித்துக் கொள்கிறார்.

11. இவ்வாறு, பல்வேறு அமைப்புகளும் கூட்டுறவு நிலையங்களும் உற்பத்திப் பொருளாதாரச் செயற்பாடுகள் மற்றும் விற்பனை அல்லது பயிற்சியில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளன. அவை, இப்போதுள்ளவாறே தன்னுரிமையுடன் தங்குதடையின்றி தொடர்ந்து செயற்பட வேண்டும். எனினும், உதவி இயக்குநரும் அவருடைய கள அலுவலர்களும் மாவட்ட ஊராட்சியின் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்படுவதுடன், அவற்றிற்குப் பொறுப்புடையவர்களாகவும் ஆக்கப்பட வேண்டும். கதர் மற்றும் ஊரகத் தொழில் திட்டங்கள் யாவும் அவை பற்றிய முழு விவரங்களுடன் அவற்றின் செயற்பாடு குறித்த உரிய நிலையில் ஊராட்சி அமைப்புகள் தெரிவிக்கப்பட வேண்டும். மாநில அளவில் கதர் மற்றும் ஊரகத் தொழில் வாரியமானது தன்னுடைய வேலை வாய்ப்பினை/வருவாய் உருவாக்கத் திட்டங்களைச் செயற்படுத்த மாவட்ட ஊராட்சிகள் மற்றும் பிற ஊரக உள்ளாட்சிகளின் ஆலோசனை/ஆதரவைப் பெற வேண்டும். மேலும், மாவட்ட திட்டமிடுபவர்களால் காலமுறையில் நடத்தப்படும் ஆய்வுக் கூட்டங்களிலும் கலந்து கொள்ள வேண்டும்.

12. பின்வரும் செய்கடமைகள் ஊரக உள்ளாட்சி அமைப்புகளிடம் ஒப்படைக்கப்படலாம்.

## I. ஊராட்சி

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. திட்டமிடல் கண்காணித்தல், மேற்பார்வையிடல் | (1) கிராம அளவில் உள்ளாற்றலுடைய செயல்களைக் கண்டறிந்து, அவற்றுக்கெனத் திட்டங்களை வகுத்தல். |
| 2. பயனாளர்களுக்குத் தொழில் நுட்பவியல் பயிற்சியளித்தல் மற்றும் செயல் திறம் அளித்தல் | (1) தனித்துறைச் செயல்திறம் மிக்கவற்றில் மற்றும் தொழில் நுட்பவியலில் பயிற்சியளிக்கப்பட வேண்டிய பயனாளர்களைக் கண்டறிதல். |

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| | (2) ஊரகக் கைவினைஞர்களுக்கு அவர்களுடைய வணிகம் மற்றும் கைத்தறித் தொழில்களுக்கேற்ற பயிற்சி நிலையங்கள் பற்றி தகவல்களைச் சென்றடைய செய்தல். |
| 3. உள்ளமைப்பு வளர்ச்சி | (1) கதர் மற்றும் ஊரகத் தொழில் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ள நிலையங்களுக்கு/ கழகங்களுக்கு உதவி செய்தல். |
| | (2) பொதுச் சொத்து வள ஆதாரங்கள் மற்றும் ஊராட்சிச் சொத்து களிலிருந்து உள்ளூரில் கிடைக்கக் கூடிய மூலப் பொருள்களுக்குரிய வாய்ப்புகளை எளிதாக்குதல் அம்மூலப் பொருள்களை / முதலீடுகளைப் பயன்படுத்து வதற்குரிய கட்டணங்களை விதித்தல். |

## II. ஊராட்சி ஒன்றியம்

| நடவடிக்கை | அதிகார ஒப்படைப்பு |
|---|---|
| 1. திட்டமிடல் கண்காணித்தல்,<br><br>மேற்பார்வையிடல் | (1) கதர் மற்றும் கிராமத்தொழில்கள் குழு/கதர் மற்றும் கிராமத் தொழில்கள் வாரியம்/கைத்தறி கைவினைப் பொருள் வளர்ச்சி போன்ற பிற முகமைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்து, கதர், ஊரக மற்றும் குடிசைத் தொழில் மற்றும் பிறகை வினைஞர் செயற் – பாடுகளுக்குத் திட்டம் தயாரித்தல். |
| 2. பயிற்சி மற்றும் வேலைத் திறன் வளர்ச்சி, தொழில் நுட்பவியல் பயனாளர் மாற்றம். | (1) பயிற்சி நிலையங்களுக்கு பயிற்சிக்காக பயனாளர்களைத் ஊராட்சிகள் வாயிலாகப் பயனாளர்களைத் தெரிவு செய்வதில் உதவி செய்தல். |
| | (2) பல்வேறு உற்பத்தி, வணிகம் மற்றும் கைத்திறத் தொழிலில் தொழில் நுட்பவியல் சென்றடையவும் மேம்பாடடையவும் செய்தல். |
| | (3) ஊரகக் கைவினைஞர்களுக்கு மேம்பட்ட பயிற்சி மற்றும் தொழில் நுணுக்கம் கற்பிக்க புதிய பயிற்சி மற்றும் உற்பத்திப் அலகுகளைத் தொடங்குதல் அல்லது ஏற்கெனவே உள்ள அலகுகளை மாற்றி யமைத்தல். |
| 3. உள்ளமைப்பு வளர்ச்சி | (1) பொதுவான பணியிடங்களை, பட்டறை,பணிவளாகங்கள் கட்டுவது போன்ற உள்ளமைப்பு வளர்ச்சிக்காகப் பல்வேறு முகமைகளின் திட்டங்களை ஒருங்கிணைத்தல் |
| | (2) விளைபொருள்களின் உற்பத்திக்கும், விற்பனைக்கும் கூட்டுறவு நிலையங்களுக்கு உதவுதல். |
| 4. கடன் மற்றும் நிதியுதவி | (1) கைவினைஞர்களுக்குக் கடன் உதவியை உறுதி செய்தல். |
| | (2) கண்காணித்து, மேற்பார்வையிட்டு முன்னேற்றம் பற்றி மாவட்ட ஊராட்சிகளுக்குத் தெரிவித்தல். |

103



## II. மாவட்ட ஊராட்சி

| | நடவடிக்கை | | அதிகார ஒப்படைப்பு |
|---|---|---|---|
| 1. | திட்டமிடல் கண்காணித்தல், மற்றும் மேற்பார்வையிடல் | (1) | கதர், கைவினைப் பொருள்கள், பட்டுப்புழு வளர்ப்பு, குடிசை மற்றும் ஊரகத் தொழில் வளர்ச்சிக்காக மாவட்ட நிலையில் திட்டம் தயாரித்தல் |
| 2. | பயிற்சி & வேலைத் திறன் வளர்ச்சி, தொழில் நுட்பப்பயனாளர் மாற்றம். | (1) | உரிய தொழில் நுட்பவியல் பயிற்சியளிக்க ஏற்ற பயிற்சி மையங்களையும் நிலையங் களையும் கண்டறிந்து, அவ் விவரங்களை ஊராட்சி ஒன்றியங் களுக்கும் ஊராட்சிகளுக்கும் பரப்புதல் |
| 3. | கடன் மற்றும் நிதி ஆதரவு | (1) | மாவட்டத்தில் கிடைக்கக்கூடிய இயல் திறங்களைப் பயன் படுத்துவதற்கு தேவையான உள்ளமைப்புகள் பற்றி கா.ஊ.தொ. வா.க்கு ஆலோசனை அளித்தல். |
| | | (2) | மாவட்டம் முழுவதற்குமான கடன் திட்டத்தின் ஒரு பகுதியாக மாவட்டத்திலுள்ள இப்பிரிவுக்கு ஏற்ற கடன் வசதிக்கு வடி வமைத்துத் தருதல். |

**சிக்கல்கள்**

13 பஞ்சாயத்து ஆட்சி திட்டத்தின் பயனாவது கீழ்மட்டத்திலிருந்து உருவாகுதல், ஒவ்வொரு ஊராட்சியும் கதர் மற்றும் ஊரக மற்றும் குடிசைத் தொழில் பிரிவுக்கெனத் திட்டப் பணிகளிலிருந்து நிதியுதவி பெறும் நோக்கமுடையதாக இருக்க வேண்டும். இது, வேலைவாய்ப்பை உருவாக்குவதோடு நின்றுவிடாமல் மூலப்பொருள்கள், நியாயமான கூலி, கிடைக்கவும். கைவினைஞர்களுக்கு நன்மைபயக்கும் வகையில் விளைபொருள்களை விற்பனை செய்பவும் வழிவகுக்கிறது. இது, ஊரகப்பகுதிகளுக்கு மற்றும் நகர்புற பகுதிகளுக்கு மக்கள் குடியேறுவதைத் தடுக்கும்.

14. கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் பட்டு வளர்ப்புத் துறை, மாவட்டத்தொழில் மையம், கைத்திறத்தொழில் கழகம், தமிழ்நாடு பனை வாரிய இணையம் முதலியவற்றின் உதவி இயக்குனர்கள், அரசு மற்றும் க.ஊ.தொ.ஆ. திட்ட ஆய்வுக்காக மாவட்ட ஊராட்சிக்கு அறிக்கை அனுப்ப வேண்டும். இவர்களுடைய களப்பணியாளர்கள் உள்ளூர் கைவினைஞர்களின் தேவை பயிற்சி மற்றும் ஊர் நிலையில் இயல் திறன் செயற்பாடுகளைக் கண்டறிய வேண்டும்.

15. குடிசை தொழில்களை ஊக்குவுக்கவும் மற்றும் மேம்பாடு செய்யவும் ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய நிதி வரம்பிற்குள் சில வசதிகளை செயது கொடுக்க பிரிவு 112ன் கீழ் வழிவகை செய்யப்பட்டுள்ளது.